1. If the forces affecting the two variable series are independent of each other then it is called
இரண்டு மாறித்தொடர்களை பாதிக்கும் விசை ஒன்றுக்கொன்று சார்பற்றதாக இருந்தால், அது

(A) Positive correlation
நேர்மறை தொடர்பு

(B) Negative correlation
எதிர்மறை தொடர்பு

(C) Spurious correlation
போலி தொடர்பு

(D) Partial correlation
பகுதி தொடர்பு

(E) Answer not known
விடை தெரியவில்லை

2. If two random variables have the regression equations

$3x + 2y - 26 = 0$
$6x + y - 31 = 0$ Find the mean values of $X$ and $Y$

இரண்டு மாறிகளின் எளிய நேர்கோட்டு உடன் தொடர்பு

$3x + 2y - 26 = 0$
$6x + y - 31 = 0$ எனில் $X$ மற்றும் $Y$ ன் கூட்டு சராசரி யாது?

(A) (6, 4)

(B) (4, 6)

(C) (7, 4)

(D) (4, 7)

(E) Answer not known
விடை தெரியவில்லை

3. Correlation coefficient is independent of change of
ஒட்டுறவுக்கெழு என்பது ———— ன் மாற்றங்களுக்கு சார்பற்றது

(A) Origin
ஆதி

(B) Scale
அளவு

(C) Origin and scale
ஆதி மற்றும் அளவு

(D) Neither origin nor scale
ஆதியும் இல்லை அளவும் இல்லை

(E) Answer not known
விடை தெரியவில்லை

4. If the two regression coefficient are $b_1$ and $b_2$, then the correlation coefficient
$b_1$ மற்றும் $b_2$ ஆகியவை தொடர்போக்கு கெழுக்கள் எனில் ஒட்டுறவுக்கெழு என்பது

(A) $b_1 / b_2$
(B) $b_2 / b_1$
(C) $b_1 b_2$
(D) $\pm\sqrt{b_1 b_2}$
(E) Answer not known
விடை தெரியவில்லை

5. The value of the arithmetic mean of the regression coefficients is not less than the modulus value of the correlation co-efficient is
உடன் தொடர்பு கெழுவின் எண் கணித சராசரியின் மதிப்பானது ஒட்டுறவு கெழுவின் மதிப்பை விட குறைவானது இல்லை என்பது

(A) Magnitude property
அளவு பண்பு
(B) Mean property
சராசரியின் பண்பு
(C) Signature property
மதிப்புமிக்க பண்பு
(D) Fundamental property
அடிப்படை பண்பு
(E) Answer not known
விடை தெரியவில்லை

6. From the following choices, pick the odd one
கீழ்கண்டவற்றிலிருந்து பொருத்தமில்லாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்

(A) Cov $(X,Y) = E[(X-\overline{X})(Y-\overline{Y})]$
(B) $Cov(X,Y) = E(XY) - E(X).\ E(Y)$
(C) $Cov(X,Y) = E\{[X-E(X)].\ [Y-E(Y)]\}$
(D) $Cov(X,Y) = E(X).\ E(Y) + E(XY)$
(E) Answer not known
விடை தெரியவில்லை

7. If $b_{xy} = 2.5$, then the possible value of $b_{yx}$ is

$b_{xy} = 2.5$ எனில் $b_{yx}$ இன் சாத்தியமான மதிப்பு

(A) 1

(B) 2

(C) –1

(D) 0.25

(E) Answer not known
விடை தெரியவில்லை

8. If $\beta_2$ is greater than 3, the curve is called

$\beta_2$ ன் மதிப்பு 3 யை விட பெரியது எனில், அதனின் வளைவை ———— என அழைக்கப்படுகிறது

(A) Meso Kurtic
இயல்நிலை தட்டை

(B) Lepto Kurtic
குறைத்தட்டை

(C) Platy Kurtic
மிகைத்தட்டை

(D) Standard Deviation
திட்டவிலக்கம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

9. Pearson's coefficient skewness is –0.7 and the values of the median and standard deviation are 12.8 and 6 respectively, then the mean value is

பியர்சனின் (Pearson's) கோட்டக் கெழு –0.7 மற்றும் இடைநிலை அளவு, திட்டவிலக்கம் இவைகளின் மதிப்புகள் முறையே 12.8 மற்றும் 6 எனில் சராசரி மதிப்பு

(A) 11.4

(B) 13.4

(C) 2.87

(D) 17.1

(E) Answer not known
விடை தெரியவில்லை

10. The sum of the squared deviations of the items from the mean is
உருப்படிகளின் சராசரியிலிருந்து கணக்கிடப்படும் வர்க்க விலக்கங்களின் கூடுதல் என்பது

(A) 0
0

(B) a minimum
ஒரு சிறுமம்

(C) a maximum
ஒரு பெருமம்

(D) 1
1

(E) Answer not known
விடை தெரியவில்லை

11. Factory $X$ has average daily wages of Rs. 300 and variance 9. Factory $Y$ has average daily wages Rs. 200 with variance 16

தொழிற்சாலை $X$ ன் சராசரி தினக்கூலி ரூ. 300 மற்றும் மாறுபாடு 9. தொழிற்சாலை $Y$ ன் சராசரி தினக்கூலி ரூ. 200 மற்றும் மாறுபாடு 16 எனில்

(i) Which factory pays higher average wage?
எந்த தொழிற்சாலையில் அதிக கூலி தரப்படுகிறது?

(ii) Which factory has a more consistent wage structure.
எந்த தொழிற்சாலையில் நிலைப்பு தன்மையான கூலி அமைப்பு உள்ளது.

(A) Factory $X$ pays higher average wage and more consistent wage structure
தொழிற்சாலை $X$ ல் அதிக கூலி தரப்படுகிறது மற்றும் தலைப்பு தன்மையான அமைப்பு உள்ளது

(B) Factory $Y$ pays higher average wage and more consistent wage structure
தொழிற்சாலை $Y$ ல் அதிக கூலி தரப்படுகிறது மற்றும் நிலைப்பு தன்மையான அமைப்பு உள்ளது

(C) Factory $X$ pays higher average wage, Factory $Y$ has more consistent wage structure
தொழிற்சாலை $X$ ல் அதிக கூலி தரப்படுகிறது $Y$ நிலைப்பு தன்மையான அமைப்பு உள்ளது

(D) Factory $Y$ pays higher average wage, Factory $X$ has more consistent wage structure
தொழிற்சாலை $Y$ ல் அதிக கூலி தரப்படுகிறது $X$ நிலைப்பு தன்மையான அமைப்பு உள்ளது

(E) Answer not known
விடை தெரியவில்லை

12. For '$n$' natural numbers, the standard deviation computed as
'$n$' இயல் எண்களின், திட்ட விலக்கம்

(A) $\sigma = \sqrt{\frac{1}{12}(n^2 - 1)}$

(B) $\sigma = \sqrt{\frac{1}{12}(n - 1)}$

(C) $\sigma = \sqrt{\frac{1}{12}n(n - 1)}$

(D) $\sigma = \sqrt{\frac{1}{n}(n^2 - 1)}$

(E) Answer not known
விடை தெரியவில்லை

13. For what value of '$a$', $\Sigma|x - a|$ is minimum
'$a$' ன் எந்த மதிப்பிற்கு $\Sigma|x - a|$ குறைவாக இருக்கும்

(A) mean
சராசரி

(B) median
இடைநிலை

(C) mode
முகடு

(D) S.D
திட்டவிலக்கம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

14. In a frequency distribution the coefficient of skewness based on quartiles is 0.5. If the sum of upper and lower quartiles is 28 and the median is 11. Find the values of lower and upper quartiles
அலைவெண் பரவலின் கால்மானங்களை சார்ந்த கோட்ட கெழு 0.5, கீழ் மற்றும் மேல் கால்மானங்களின் கூட்டுதொகை 28 மற்றும் இடைநிலை 11 எனில் கீழ் மற்றும் மேல் கால்மானங்களை காண்க.

(A) $Q_1 = 8, Q_3 = 20$

(B) $Q_1 = 20, Q_3 = 8$

(C) $Q_1 = 14, Q_3 = 7$

(D) $Q_1 = 7, Q_3 = 10$

(E) Answer not known
விடை தெரியவில்லை

15. Which of the following is correct?

A distribution is said to be skewed if

கீழ்கண்டவற்றுள் எது சரியானது ?

ஒரு பரவல் எப்பொழுது கோட்டமாக இருக்கும்

(i) Mean $\neq$ median $\neq$ mode
சராசரி $\neq$ இடைநிலை $\neq$ முகடு

(ii) Quartiles are not equidistant from median
கால்மானம் இடைநிலையிலிருந்து சமதூரத்தில் இல்லை

(iii) The curve drawn with the help of the given data is not symmetrical but stretched more to one side than the other
கொடுக்கப்பட்ட தரவுகளின் உதவியுடன் வரையப்பட்ட வளைவு சமச்சீராக இல்லை. ஆனால் ஒரு பக்கத்தை விட மற்றொன்றை நோக்கி அதிகமாக நீட்டப்பட்டுள்ளது

(A) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(B) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(D) (i), (ii) and (iii)
(i) , (ii) மற்றும் (iii)

(E) Answer not known
விடை தெரியவில்லை

16. In chronological classification data are classified on the basis of
காலவரிசை வகைப்பாட்டில் தரவுகள் ———— அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன

(A) Attribute
பண்பு

(B) Class interval
பிரிவு இடைவேளை

(C) Location
இடம்

(D) Time
நேரம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

17. What is the expansion of NSSO?
NSSO என்பதன் விரிவாக்கம் என்ன?

(A) National statistical survey organization
தேசிய புள்ளியியல் அளவெடுப்பு நிறுவனம்

(B) National sample statistics organization
தேசிய மாதிரி புள்ளியியல் நிறுவனம்

(C) National sample survey organization
தேசிய மாதிரி அளவெடுப்பு நிறுவனம்

(D) National state survey organization
தேசிய மாநில அளவெடுப்பு நிறுவனம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

18. Match the following :
பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Square<br>சதுரம் | 1. | Statistical data in picture<br>புள்ளியியல் தரவுகள் வரைபடம் மூலம் |
| (b) | Bar Diagram<br>பட்டை விளக்கப்படம் | 2. | Two dimensional<br>இரு பரிமாணம் |
| (c) | Pictogram<br>உருவ விளக்கப்படம் | 3. | Three dimensional<br>முப்பரிமாணம் |
| (d) | Cube<br>கன சதுரம் | 4. | One-dimensional<br>ஒரு பரிமாணம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (4) | (1) | (3) |
| (B) | (3) | (1) | (4) | (2) |
| (C) | (4) | (3) | (2) | (1) |
| (D) | (3) | (2) | (4) | (1) |

(E) Answer not known
விடை தெரியவில்லை

19. Which of the following statements are true about the method of collecting primary data?
முதல்நிலை தரவுகளை சேகரிக்கும் முறைகளைப் பொறுத்து, பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

(i) Publications of state and central government
மாநில, மத்திய அரசுகளால் வெளியிடப்படும் தகவல்கள்

(ii) Sending questionnaires by mail
வினாத்தொகுப்பு பட்டியலை அஞ்சல்வழி அனுப்புதல்

(iii) Enumeration method
கணிப்பு முறை

(iv) Direct personnal investigation method
தனிப்பட்ட நேரடி விசாரணை முறை

(A) (ii), (iii) and (iv) only
(ii), (iii) மற்றும் (iv) மட்டும்

(B) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(C) (i), (ii) and (iv) only
(i), (ii) மற்றும் (iv) மட்டும்

(D) (i) only
(i) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

20. One dimensional diagrams are drawn on the basis of
ஒரு பரிமாண வரைபடங்கள் __________ ன் அடிப்படையில் வரையப்படுகின்றன.

(A) Length
நீளம்

(B) Width
அகலம்

(C) Degree
கோணம்

(D) Depth
ஆழம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

21. If $X \sim N(\mu, \sigma^2)$ then sample mean $\overline{X}$ is an __________ estimator.

$X \sim N(\mu, \sigma^2)$ எனில் மாதிரி கூறின் சராசரி $\overline{X}$ _________ மதிப்பீட்டளவையாகும்.

(A) Unbiased and efficient
பிழையற்ற மற்றும் திறனானது

(B) Unbiased and inefficient
பிழையற்ற மற்றும் திறனற்றது

(C) Biased and efficient
பிழையானது மற்றும் திறனானது

(D) Biased and inefficient
பிழையானது மற்றும் திறனற்றது

(E) Answer not known
விடை தெரியவில்லை

22. In which of the following test is used to test the equality of the population mean when the sample size is $n_1 = 10$, $n_2 = 12$

கூறுகளின் எண்ணிக்கை $n_1 = 10$, $n_2 = 12$ ஆக இருக்கும் பொழுது முழுமைத்தொகுதியின் சராசரிகளின் சமமானவைதானா எனச் சோதனை செய்ய பின்வரும் சோதனைகளில் எது பயன்படுகிறது?

(A) t-test
t-சோதனை

(B) $\chi^2$-test
$\chi^2$-சோதனை

(C) F-test
F-சோதனை

(D) Z-test
Z-சோதனை

(E) Answer not known
விடை தெரியவில்லை

23. Which of the following is correct in t test for testing two samples

t சோதனையை பொருத்தவரை எது சரியானவை ஆகும் (இரண்டு மாதிரிகள்)

(i) degrees of freedom for independent samples is $n_1 + n_2 - 2$

சார்பற்ற வாய்ப்பு மாதிரிகளின் கட்டின்மை கூறுகள் $n_1 + n_2 - 2$

(ii) degrees of freedom for dependent samples is $n - 2$

சார்புள்ள வாய்ப்பு மாதிரிகளின் கட்டின்மை கூறுகள் $n - 2$

(A) (i) only
(i) மட்டும்

(B) (ii) only
(ii) மட்டும்

(C) (i) and (ii)
(i) மற்றும் (ii)

(D) neither (i) nor (ii)
(i) இல்லை மற்றும் (ii) இல்லை

(E) Answer not known
விடை தெரியவில்லை

24. Match the following :

பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Chi-square test<br>கை-வர்க்க சோதனை | 1. | Test for the equality of variances<br>மாறுபாடுகளின் சமத்துவத்திற்கான சோதனை |
| (b) | F-test<br>F-சோதனை | 2. | Testing the goodness of fit<br>பொருத்தலின் செம்மைத்தன்மையை அறியும் சேதானை |
| (c) | Z-test<br>Z-சோதனை | 3. | Testing the difference of the mean between two large samples<br>இரண்டு பெரிய கூறுகளுக்கிடையேயான சராசரியின் வேறுபாட்டைச் சோதிக்கிறது |
| (d) | t-test<br>t-சோதனை | 4. | Testing the difference of the mean between two small sample<br>இரண்டு சிறிய கூறுகளுக்கிடையேயான சராசரியின் வேறுபாட்டைச் சோதிக்கிறது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (1) | (2) | (3) | (4) |
| (B) | (4) | (3) | (2) | (1) |
| (C) | (1) | (2) | (4) | (3) |
| (D) | (2) | (1) | (3) | (4) |

(E) Answer not known
விடை தெரியவில்லை

25. To test the independent of 2 attributes A and B with 5 rows and 4 columns. The Chi-square degrees of freedom is

A மற்றும் B ஆகிய பண்புகளின் சார்பற்ற தன்மையை அறியும் சோதனையில் 5 நிரைகளும் 4 நிரல்களும் உள்ளன. கை வர்க்கத்தின் கட்டின்மை கூறுகள் என்ன?

(A) 20
(B) 12
(C) 19
(D) 18
(E) Answer not known
விடை தெரியவில்லை

26. A Hypothesis which does not specify completely ‘r’ parameter of a population is termed as a __________ hypothesis with __________ degrees of freedom.

ஒரு முழுமைத் தொகுதியில் ‘r’ சுட்டுறுப்புகளை முழுமையாக குறிப்பிடாத ஒரு எடுகோள் __________ எடுகோள் என அழைக்கப்படுகிறது மற்றும் அது __________ கட்டின்மைபடிகளை உடையதாக இருக்கும்.

(A) Simple, $r$
எளிய, $r$

(B) Composite, $r-1$
சிக்கல், $r-1$

(C) Simple, $r-1$
எளிய, $r-1$

(D) Composite, $r$
சிக்கல், $r$

(E) Answer not known
விடை தெரியவில்லை

27. If $T_1$ is the most efficient estimator with variance $V_1$ and $T_2$ is any other estimator with variance $V_2$, then efficiency $E$ of $T_2$ is ———— and the range 8 $E$ lies between

மாறுபாடு $V_1$ யை கொண்ட $T_1$ என்பது மிகுதிறன் மதிப்பீட்டளவை மற்றும் $T_2$ என்பது $V_2$ என்ற மாறுபாடு கொண்ட மற்றொரு மதிப்பீட்டளவை எனில் $T_2$ ன் திறன் $E$ ———— ஆகும் மற்றும் $E$ ன் வீச்சு இந்த ———— இடைவெளிகள் அடங்கும்

(A) $E=\frac{V_2}{V_1}$ and $0 \le E \le 1$
$E=\frac{V_2}{V_1}$ மற்றும் $0 \le E \le 1$

(B) $E=\frac{V_1}{V_2}$ and $0 < E < 1$
$E=\frac{V_1}{V_2}$ மற்றும் $0 < E < 1$

(C) $E=\frac{V_1}{V_2}$ and $0 \le E \le 1$
$E=\frac{V_1}{V_2}$ மற்றும் $0 \le E \le 1$

(D) $E=\frac{V_1}{V_2}$ and $-1 \le E \le 1$
$E=\frac{V_1}{V_2}$ மற்றும் $-1 \le E \le 1$

(E) Answer not known
விடை தெரியவில்லை

28. If $x_1, x_2, ......x_n$ be a random sample from $N(\mu, \sigma^2)$, then the sample mean $\overline{X}$ is __________ estimator for $\mu$.

$x_1, x_2, ......x_n$ ஆகியவைகள், $N(\mu, \sigma^2)$ என்ற இயல்நிலை தொகுதியிலிருந்து பெறப்படும் சமவாய்ப்பு கூறுகள் எனில், கூறுசராசரி $\overline{X}$ என்பது $\mu$-ற்கான _________ மதிப்பீட்டளவை ஆகும்.

(A) Unbiased
பிழையற்ற

(B) Consistent
நிலைத்த

(C) Biased
பிழையுள்ள

(D) Both (A) and (B)
(A) மற்றும் (B) ஆகிய இரண்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

29. The test which is used to test the equality of the population variances
முழுமைத் தொகுதியின் பரவற்படிகளின் சமத் தன்மையை சோதனை செய்ய எந்த சோதனை பயன்படுகிறது.

(A) t-test
t-சோதனை

(B) $\chi^2$-test
$\chi^2$-சோதனை

(C) F-test
F-சோதனை

(D) Z-test
Z-சோதனை

(E) Answer not known
விடை தெரியவில்லை

30. If $E(T_n) > \theta$, then $T_n$ is said to be an

$E(T_n) > \theta$ எனில் $T_n$ என்பது ஒரு ________ மதிப்பீடாகும்.

(A) Unbiased estimator
பிறழ்ச்சியற்ற

(B) Positively biased estimator
நேர் பிறழ்ச்சியுள்ள

(C) Negatively biased estimator
எதிர் பிறழ்ச்சியுள்ள

(D) Biased estimator
பிறழ்ச்சியுள்ள

(E) Answer not known
விடை தெரியவில்லை

31. The mean and variance of standard normal distribution are
திட்ட இயல்நிலை பரவலின் சராசரி மற்றும் மாறுபாடுகள் ஆகியவை

(A) 0, 0

(B) 1, 1

(C) 0, 1

(D) 1,0

(E) Answer not known
விடை தெரியவில்லை

32. If the mean of a binomial distribution is 4 and variance is 3 then the value of n is

ஈருப்புப் பரவலின் சராசரி 4 மற்றும் பரவற்படி 3 எனில் n-ன் மதிப்பானது

(A) $\frac{1}{3}$

(B) $\frac{1}{4}$

(C) 16

(D) 4

(E) Answer not known
விடை தெரியவில்லை

33. Which of the following is correct?
கீழ்கண்டவற்றுள், எது சரியானது ?

In Geometric distribution,

பெருக்குச் சராசரியில்,

(i) Probability that there are $x$ failures preceding the first success

முதல் வெற்றிக்கு முன் $x$ - தோல்விகளின் நிகழ்தகவு

(ii) Probability that there are $x$ success preceding the first failure

முதல் தோல்விக்கு முன் $x$ - வெற்றிகளின் நிகழ்தகவு

(A) (i) only
(i) மட்டும்

(B) (ii) only
(ii) மட்டும்

(C) Both (i) and (ii)
(i) மற்றும் (ii) இரண்டுமே

(D) Neither (i) or (ii)
(i) அல்லது (ii)

(E) Answer not known
விடை தெரியவில்லை

34. Stratified sampling is not preferred when the population is
முழுமை தொகுதியானது ________ இருக்கும் பொழுது படுகை கூறு முறை உகந்தது அல்ல.

(A) Sample
கூறு

(B) Constant
மாறி

(C) Hetrogeneous
பல விதமானதாக

(D) Homogeneous
ஒரே விதமானதாக

(E) Answer not known
விடை தெரியவில்லை

35. Which of the following sampling technique the population is divided into homogeneous sub population?
கீழ்க்கண்ட எந்த கூறெடுத்தல் முறையில் முழுமை தொகுதியை பல சீரான துணை தொகுதிகளாக பாகுபடுத்தப்படுகிறது?

(A) Stratified random sampling
படுகை கூறெடுத்தல்

(B) Simple random sampling
எளிய சமவாய்ப்பு கூறெடுத்தல்

(C) Systematic sampling
ஒழுங்கு மாதிரி கூறெடுத்தல்

(D) Cluster sampling
திரள் கூறெடுத்தல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

36. If $X_i (i = 1, 2, ...n)$, are identically and independently distributed normal variates with mean $\mu$ and variance $\sigma^2$, then their mean $\overline{X}$ is
$X_i (i = 1, 2, ...n)$ என்பவை சராசரி $\mu$ மற்றும் மாறுபாடு $\sigma^2$ ஆகியவற்றை கொண்ட ஒத்த அட்டுறுப்புடைய மற்றும் சார்பற்ற இயல்நிலை பரவல் மாறிகள் எனில், அவற்றின் சராசரி $\overline{X}$ என்பது

(A) $N(\mu, \sigma^2)$

(B) $N\left(\mu, \frac{\sigma^2}{n}\right)$

(C) $N\left(n\mu, \frac{\sigma^2}{n}\right)$

(D) $N\left(\frac{\mu}{n}, n\sigma^2\right)$

(E) Answer not known
விடை தெரியவில்லை

37. Which of the following distribution variance is greater than the mean?
பின்வரும் பரவலில் எந்த பரவலில் பரவற்படி, சராசரியை விட அதிகமாக இருக்கும்?

(A) Binomial distribution
ஈருறுப்புப் பரவல்

(B) Poisson distribution
பாய்ஸான் பரவல்

(C) Geometric distribution
பெருக்குப் பரவல்

(D) Exponential distribution
அடுக்குப் பரவல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

38. Find out the '$n$' for the Binomial distribution for which mean is 20 and the variance is 15
ஒரு ஈருறுப்பு மாறியின் சராசரி 20 மற்றும் மாறுபாடு 15 எனில் '$n$'-ஐ காண்க

(A) 80

(B) 70

(C) 25

(D) 65

(E) Answer not known
விடை தெரியவில்லை

39. An integer is choosen at random from 1 to 200 digits. What is the probability that the choosen integer is divisible by 6?
1 லிருந்து 200 வரை உள்ள முழு எண்களில் இருந்து, ஒரு முழு எண் சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த முழு எண் 6-ஆல் வகுபடுவதற்கான நிகழ்தகவு என்ன?

(A) 34/200

(B) 32/200

(C) 33/200

(D) 35/200

(E) Answer not known
விடை தெரியவில்லை

40. Assertion [A] : In throwing a die all the 6 faces numbered 1 to 6 are mutually exclusive events.

அனுமானம் [A] : ஒரு பகடையை வீசும் பொழுது கிடைக்கக்கூடிய எண் 1-லிருந்து 6-வரை குறிக்கப்பட்டுள்ள 6 முகங்கள் அனைத்தும் ஒன்றையொன்று விலக்கும் நிகழ்ச்சிகள் ஆகும்.

Reason [R] : If any one these faces comes, the probability of others in the same trial is ruled out.

காரணம் [R] : மேற்கூறிய முகங்களில் ஏதேனும் ஒன்று நிகழ்ந்து விட்டால், மற்ற முகங்கள் அதே சோதனையில் நிகழ்வதற்கான நிகழ்தகவு புறந்தள்ளப்படும்.

(A) [A] is true but [R] is false

[A] உண்மை ஆனால் [R] தவறு

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

[A] மற்றும் [R] ஆகிய இரண்டும் உண்மை, மற்றும் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கமாகும்

(C) [A] is false [R] is true

[A] என்பது தவறு [R] என்பது உண்மை

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

[A] மற்றும் [R] ஆகிய இரண்டும் உண்மை, ஆனால் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கம் கிடையாது

(E) Answer not known
விடை தெரியவில்லை

41. A ball is drawn at random from a box containing 6 red balls, 4 white balls and 5 blue balls, then the probability that it is not red

6 சிவப்பு, 4 வெள்ளை மற்றும் 5 நீல நிற பந்துகள் கொண்ட ஒரு பெட்டியில் இருந்து ஒரு பந்து சமவாய்ப்பு முறையில் எடுக்கப்பட்டதெனில், அந்த பந்து சிவப்பு நிற பந்தாக இல்லாமல் இருப்பதற்கான நிகழ்தகவு

(A) 6/15

(B) 9/15

(C) 5/15

(D) 4/15

(E) Answer not known
விடை தெரியவில்லை

42. Let $X$ be a random variable, $f(x)$ be a density function given by

$$f(x)=\begin{cases} Ke^{-2x} & x \geq 0 \\ 0 & otherwise \end{cases}$$

Find the value of $K$.

$X$ என்பது சரிசம வாய்ப்புள்ள மாறி மற்றும் அதன் அடர்த்தி சார்பு $f(x)$. என்பது கொடுக்கப்பட்டுள்ளது

$$f(x)=\begin{cases} Ke^{-2x} & x \geq 0 \\ 0 & \text{மற்றவை} \end{cases}$$

எனில், $K$ ன் மதிப்பு காண்க

(A) 2

(B) $\frac{1}{2}$

(C) 0

(D) 1

(E) Answer not known
விடை தெரியவில்லை

43. If $A$ and $B$ are two events such that $A \subset B$ then it will be
'$A$' மற்றும் '$B$' என்பன இரண்டும் நிகழ்வுகள், $A \subset B$ எனில் அதனின் விளைவு

(A) $P(A) \leq P(B)$

(B) $P(A) = P(B)$

(C) $P(A) \geq P(B)$

(D) $P(A) \neq P(B)$

(E) Answer not known
விடை தெரியவில்லை

44. If $A$, $B$ and $C$ are three arbitrary events then the expression for the event only $A$ occurs is
$A$, $B$ மற்றும் $C$ என்பவை மூன்று தன்னிச்சையாக நிகழ்வுகள் எனில் $A$ நிகழ்ச்சி மட்டும் நிகழ்வதை வெளிப்படுத்துவது

(A) $A \cap B \cap \overline{C}$

(B) $A \cap \overline{B} \cap \overline{C}$

(C) $A \cap B \cap C$

(D) $A \cup B \cup C$

(E) Answer not known
விடை தெரியவில்லை

45. A problem in statistics is given to three students $A$, $B$ and $C$ whose chances of solving it are $\frac{1}{2}, \frac{3}{4}$ and $\frac{1}{4}$ respectively. What is the probability that the problem will be solved if all of them try independently?

புள்ளியியலில் ஒரு கணக்கை மூன்று மாணவர்கள் $A$, $B$ மற்றும் $C$ க்கு கொடுக்கப்பட்டது. அவர்கள் முறையே $\frac{1}{2}, \frac{3}{4}$ மற்றும் $\frac{1}{4}$ என்ற நிகழ்தகவு முறையில் அக்கணக்கிற்கு விடை கண்டுபிடிப்பாளர்கள் எனில் அவர்கள் தனித்தனியாக முயற்சி செய்து கொடுக்கப்பட்ட கணக்கிற்கு விடை காண்பதற்கான நிகழ்தகவு என்ன?

(A) $\frac{3}{32}$

(B) $\frac{25}{32}$

(C) $\frac{17}{32}$

(D) $\frac{29}{32}$

(E) Answer not known
விடை தெரியவில்லை

46. "Consumption functions" is
"நுகர்வுசார்பு" என்பது

(A) $C = f(r)$

(B) $C = f(Y)$

(C) $C = f(I)$

(D) $C = f(S)$

(E) Answer not known
விடை தெரியவில்லை

47. In an economy all round pessimism (ie) sharp reduction of production, mass unemployment, low employment falling prices, profits, wages, credit, high rate of business failure
பொருளாதாரத்தில் அனைத்து துறைகளின் நடவடிக்கைகளும் குறைந்து காணப்படுவது உற்பத்தி, குறைவு, வேலையில்லாத நிலை, குறைந்த விலை, லாபம், கூலி, கடன் மற்றும் அதிக அளவு தொழில் சரிவு, இருப்பது

(A) Depression
பெரு மந்த காலம்

(B) Boom
பூரிப்பு காலம்

(C) Recovery
மீட்சி காலம்

(D) Recession
பின்னிறக்க காலம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

48. Choose the right answer among type which of the following statements are true about Autonomous investment
சரியான விடையை தேர்ந்தெடுக்கும் வகை. கீழ்காணும் வாக்கியங்களில் தானாக ஏற்படும் முதலீட்டை பற்றிய உண்மை வாக்கியங்கள் எவை?

(i) Interest inelastic
வட்டி நெகிழ்ச்சியற்றது

(ii) Income inelastic
வருமான நெகிழ்ச்சியற்றது

(iii) Influenced by changes in demand
மாறுகின்ற தேவையால் பாதிக்கக்கூடியது

(A) (i) only
(i) மட்டும்

(B) (ii) only
(ii) மட்டும்

(C) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(D) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

49. "Too much money chasing too few goods"
அதிகமான பணத்தை கொடுத்து மிக குறைவான பொருள் வாங்குவது

(A) Inflation
பண வீக்கம்

(B) Deflation
பண வாட்டம்

(C) Stagflation
தேக்க நிலை

(D) Depression
பெருமந்தம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

50. The rise in money wages more rapidly than the productivity of labour is
தொழிலாளர் உற்பத்தி திறனைவிட பணக்கூலி பலமடங்கு உயர்ந்து இருப்பது _________ ஆகும்.

(A) Cost push inflation
செலவு தள்ளும் பணவீக்கம் (Cost push inflation)

(B) Demand pull inflation
தேவை இழுக்கும் பணவீக்கம் (Demand pull inflation)

(C) Inflation
பணவீக்கம்

(D) Deflation
பணவாட்டம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

51. According to Keyne's, the consumption of an individual depends on
கீன்சின் கூற்றுப்படி, தனி நபரின் நுகர்வு _________ சார்ந்துள்ளது.

(A) Savings
சேமிப்பு

(B) Current level of income
நடப்பு வருமானம்

(C) Family budget
குடும்ப வரவு செலவு

(D) Rate of interest
வட்டி வீதம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

52. The concept of multiplier was first of all developed by
பெருக்கி என்ற சொல்லை முதன் முதலாக அறிமுகப்படுத்தியவர்

(A) Keynes
கீன்சு

(B) F.A. Kahn
F.A. கான்

(C) A.K. Dass Gupta
A.K. தாஸ் குப்தா

(D) K.N. Raj
K.N. ராஜ்

(E) Answer not known
விடை தெரியவில்லை

53. The principle of acceleration is associated with
முடுக்கி கோட்பாடு யாருடன் தொடர்புடையது

(A) J.M. Keynes
J.M. கீன்சு

(B) J.M. Clark
J.M. கிளார்க்

(C) Adam Smith
ஆதம் ஸ்மித்

(D) Hicks
ஹிக்ஸ்

(E) Answer not known
விடை தெரியவில்லை

54. The National income of a country is divided by the population of the country in the year
ஒரு குறிப்பிட்ட காலத்தில் நாட்டின் தேசிய வருமானத்தை அந்நாட்டின் மக்கள் தொகையால் வகுத்தால் கிடைப்பது.

(A) Per capita income
தனிநபர் வருமானம்

(B) Personal income
தனிப்பட்ட வருமானம்

(C) National income
தேசிய வருமானம்

(D) Disposal income
செலவிடத்தக்க வருமானம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

55. Govt. of India is revising GDP base year from 2011-12 to __________ by February 2026.
இந்திய அரசாங்கம் உள்நாட்டு மொத்த உற்பத்தியை கணக்கீடு செய்ய அடிப்படை ஆண்டை 2011-12 லிருந்து _________ ஆக பிப்ரவரி 2026-ல் மாற்றம் செய்யப்பட உள்ளது.

(A) 2022-23
(B) 2021-22
(C) 2020-21
(D) 2013-14
(E) Answer not known
விடை தெரியவில்லை

56. "National income is that part of objective income of the community, including of course of income derived from abroad" stated by
"தேசிய வருமானம் என்பது ஒட்டுமொத்த சமூகத்தின் வருமானத்துடன் வெளிநாட்டு வருமானத்தையும் கணக்கில் எடுத்துகொள்வது ஆகும்" கூறியவர்

(A) Keynes
கீன்ஸ்
(B) A.C. Pigou
A.C. பிகு
(C) Marshall
மார்சல்
(D) Ricardo
ரிக்கார்டோ
(E) Answer not known
விடை தெரியவில்லை

57. Tertiary sector is called
மூன்றாம் துறை எவ்வாறு அழைக்கின்றோம்?

(A) Production sector
உற்பத்தி துறை
(B) Income sector
வருவாய் துறை
(C) Industrial sector
தொழில் துறை
(D) Service sector
சேவை துறை
(E) Answer not known
விடை தெரியவில்லை

58. Reason and assertion type.

Assertion [A] : Under the value added method of calculating Gross National product the money value of final goods and services produced at current prices during a year is taken into account.

கூற்று [A] : மொத்த தேசிய உற்பத்தியின் மதிப்பு கூட்டல் முறையின் கீழ் ஒரு வருடத்தில் தற்போதைய விலையின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து இறுதி பொருட்கள் மற்றும் சேவைகளின் பண மதிப்பு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

Reason [R] : This is one of the ways for avoiding double counting.

காரணம் [R] : இதுவே பொருட்கள் மற்றும் சேவைகளின் பணமதிப்பை இருமுறை கணக்கிடுவதை தவிர்ப்பதற்கான வழியாகும்.

(A) [A] is true but [R] is false

[A] என்பது சரி [R] தவறு

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

[A] மற்றும் [R] இரண்டும் சரி மேலும் [R] [A] வுக்கான சரியான விளக்கமாகும்

(C) [A] is false [R] is true

[A] தவறு ஆனால் [R] சரி

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

[A] மற்றும் [R] இரண்டும் சரி ஆனால் [R] என்பது [A]யின் சரியான விளக்கமல்ல

(E) Answer not known

விடை தெரியவில்லை

59. The average income of the country
நாட்டின் சராசரி வருமானம் என்பது

(A) Disposal income
செலவிடதக்க வருவாய்

(B) Personal income
தனிநபர் வருமானம்

(C) Inflation rate
பணவீக்க விகிதம்

(D) Per capita income
தலா வருமானம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

60. Choose the right answer among types.
சரியான விடையை தேர்ந்தெடுக்கும் வகை.

Which of the following components are included in social accounting.

கீழ்காணும் எந்த பகுதிகள் சமுதாய கணக்கியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

(i) Production Account
உற்பத்தி கணக்கீடு

(ii) Expenditure Account
செலவின கணக்கீடு

(iii) Capital Account
மூலதன கணக்கீடு

(iv) Investment Account
முதலீட்டு கணக்கீடு

(A) (i), (ii) and (iii) only
(i), (ii) மற்றும் (iii) மட்டும்

(B) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(D) (ii), (iii) and (iv) only
(ii), (iii) மற்றும் (iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

61. "When the govt increases its investments expenditure on public works, then the level of income and employment increases" said by
"அரசாங்கம் தனது முதலீட்டு செலவை அதிகரிக்கும்போது நாட்டில் வருமானமும் வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்" கூறியவர்

(A) J.M. Keynes
ஜே.எம். கீன்ஸ்

(B) A.C. Pigoue
ஏ.சி. பிகு

(C) Marshall
மார்சல்

(D) Samuelson
சாமுவேல்சன்

(E) Answer not known
விடை தெரியவில்லை

62. Primary deficit in a government budget will be zero if
அரசின் வரவு செலவு திட்டத்தில் தொடக்க பற்றாக்குறை பூஜ்யம் ஆக இருக்கும் போது

(A) Revenue deficit is zero
வருவாய் பற்றாக்குறை பூஜ்யம்

(B) Net interest payments are zero
நிகர வட்டி கொடுத்தல் பூஜ்யம்

(C) Fiscal deficit is zero
நிதி பற்றாக்குறை பூஜ்யம்

(D) Fiscal deficit is equal to interest payment
நிதிபற்றாக்குறை = வட்டி செலுத்தும் தொகை

(E) Answer not known
விடை தெரியவில்லை

63. Which among the following are true about the Act FRBM
FRBM சட்டத்தின் உண்மை கூற்றுகள் எவை?

(i) Institutionalise fiscal discipline
நிதி ஒழுக்கத்தை நிறுவனமயமாக்குதல்

(ii) Reduce fiscal deficit
நிதி பற்றாக்குறையை குறைத்தல்

(iii) Provide loans to central and state govts.
மத்திய மாநில அரசுகளுக்கு கடன் வழங்கல்

(iv) Improve macro economic management
பேரியல் பொருளாதார நிர்வாகத்தை மேம்படுத்துதல்

(A) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(B) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i), (ii) and (iv) only
(i), (ii) மற்றும் (iv) மட்டும்

(D) (ii), (iii) and (iv) only
(ii), (iii) மற்றும் (iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

64. Which one among the below is the method of calculating budget deficit?
கீழ்காண்பவற்றுள் எந்த ஒன்று வரவு செலவு திட்ட பற்றாக்குறையை கணக்கிடும் முறையாகும்?

(A) Total expenditure minus total receipts
மொத்த செலவிலிருந்து மொத்த வரவை கழிப்பது

(B) Revenue expenditure minus revenue receipts
வருவாய் செலவிலிருந்து வருவாய் வரவை கழிப்பது

(C) Capital expenditure minus capital receipts
மூலதன செலவிலிருந்து மூலதன வரவை கழிப்பது

(D) Total expenditure minus revenue receipts
மொத்த செலவிலிருந்து வருவாய் வரவை கழிப்பது

(E) Answer not known
விடை தெரியவில்லை

65. The Fiscal Responsibility and Budget Management Act was passed in
நிதி பொறுப்பு மற்றும் வரவு செலவு மேலாண்மை சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட வருடம்

(A) 2000 (B) 2003

(C) 1991 (D) 1993

(E) Answer not known
விடை தெரியவில்லை

66. Pension payment is example of
ஓய்வூதியம் வழங்குவது கீழ்க்கண்ட ஒன்றிற்கு எடுத்துக்காட்டு ஆகும்.

(A) Plan Expenditure
திட்ட செலவு

(B) Revenue Expenditure
வருவாய் செலவு

(C) Capital Expenditure
முதலீட்டு செலவு

(D) Regular Expenditure
முறையான செலவு

(E) Answer not known
விடை தெரியவில்லை

67. SEBI is established in the year of ————
செபி நிறுவப்பட்ட ஆண்டு ————

(A) 1992

(B) 1947

(C) 1996

(D) 1998

(E) Answer not known
விடை தெரியவில்லை

68. The Government of India has decided to vaccinate the adult population of India (eg. Corona Vaccination) without any charge. This would be categorised as
அரசாங்கம் மக்களுக்கு இலவசமாக தடுப்பூசி (உதா. கொரானா தடுப்பூசி) போடுவதை நிதிப் பொருளாதாரத்தில் எவ்வாறு அழைக்கலாம்.

(A) Revenue income
வருவாய் வருமானம்

(B) Capital expenditure
மூலதனம் செலவு

(C) Revenue expenditure
வருவாய் செலவு

(D) Capital income
மூலதனம் வருமானம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

69. Classification of wealth Tax are
செல்வ வரியை __________ ஆகா வகைப்படுத்தலாம்.

(A) 2
(B) 4
(C) 5
(D) 6
(E) Answer not known
விடை தெரியவில்லை

70. Which is the correct on the Repo market?
ரெபோ அங்காடி பற்றி எது சரியானது?

(A) Money market instrument
பண அங்காடி கருவிகள்
(B) Gold market instrument
தங்க அங்காடி கருவிகள்
(C) Stock market instrument
இருப்பு அங்காடி கருவிகள்
(D) Exchange market instrument
மாற்று அங்காடி கருவிகள்
(E) Answer not known
விடை தெரியவில்லை

71. Choose the right answer among type which of the following are the true objectives of monetary policy?
சரியான விடையை தேர்ந்தெடுக்கும் வகை, கீழ்காண்பவற்றில் பணவியல் கொள்கையின் உண்மை நோக்கங்கள் எவை?

(i) Achieving full employment
முழு வேலை நிலையை அடைதல்

(ii) Increase in saving and investment
சேமிப்பு மற்றும் முதலீட்டை அதிகப்படுத்துதல்

(iii) Price stability
நிலையான விலை

(iv) Rapid economic growth
விரைவான பொருளாதார வளர்ச்சி

(A) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(B) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(C) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(D) (i) , (iii) and (iv) only
(i) , (iii) மற்றும் (iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

72. The effect of an increase in the reserve ratio on the money multiplier is
பணப்பெருக்கியில் இருப்பு விகிதத்தில் ஏற்படும் அதிகரிப்பின் விளைவு

(A) Increase
அதிகரிப்பு

(B) Decrease
குறைவது

(C) No change
மாற்றம் இல்லாதது

(D) Become in limits
எல்லையற்றது

(E) Answer not known
விடை தெரியவில்லை

73. Choose the wrong match type which of the following is incorrectly paired on demand for money.
தவறாக பொருந்தியிருப்பதை தேர்ந்தெடுக்கும் வகை. கீழ்காண்பவற்றில் பணத்தின் தேவை கருத்தில் தவறாக பொருந்தியிருப்பது எது?

| | | | |
|---|---|---|---|
| (1) | Fisher<br>பிஷர் | – | Cash Transaction Approach<br>ரொக்க பரிமாற்ற அணுகுமுறை |
| (2) | Cambridge<br>கேம்பிரிட்ஜ் | – | Cash Balance Approach<br>ரொக்க இருப்பு அணுகுமுறை |
| (3) | J.M. Keyes<br>கீன்ஸ் | – | Inventory Theoretical Approach<br>சரக்கிருப்பு கோட்பாட்டு அணுகுமுறை |
| (4) | Baumol<br>பௌமல் | – | Liquidity preference approach<br>நீர்மை விருப்ப அணுகுமுறை |

(A) (1) and (2) correct
(1) மற்றும் (2) மட்டும் சரி

(B) (2) and (3) correct
(2) மற்றும் (3) மட்டும் சரி

(C) (3) and (4) correct
(3) மற்றும் (4) மட்டும் சரி

(D) (1) and (4) correct
(1) மற்றும் (4) மட்டும் சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

74. The supply of Money is a __________ at a particular Point of Time.
பண அளிப்பு என்பது குறிப்பிட்ட காலகட்டத்தில் இருக்கும் _________ ஆகும்.

(A) Flow
ஓட்டம்

(B) Stock
இருப்பு

(C) Cyclical
சுழற்ச்சி

(D) Constant
நிலையான

(E) Answer not known
விடை தெரியவில்லை

75. Statement – 1 : Money as a medium of exchange

கூற்று 1 பணம் ஒரு பரிமாற்ற கருவியாக செயல்படுகின்றது.

Statement – 2 : Money removes the need for double coincidence of wants, inconveniences and difficulties associated with barter.

கூற்று 2 பணம் பண்டம் மாற்று முறையில் உள்ள சிரமங்கள் மற்றும் தற்செயலாக பொருந்த கூடிய விருப்பங்கள் தவிர்க்கப்படுகின்றது.

(A) Statement (1) is true and (2) is false

கூற்று (1) சரி மற்றும் (2) தவறு

(B) Statement (1) is false and (2) is true

கூற்று (1) தவறு மற்றும் (2) சரி

(C) Both statements (1) and (2) are true

கூற்று (1) மற்றும் (2) –ம் சரி

(D) Both statements (1) and (2) are false

கூற்று (1) மற்றும் (2) -ம் தவறு

(E) Answer not known

விடை தெரியவில்லை

76. Match the following :
சரியாக பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Currency with public<br>மக்களின் ரொக்க இருப்பு | – | $M_2$ |
| (b) | $M_1$ + Post office savings<br>$M_1$ + அஞ்சலக சேமிப்பு | – | $M_4$ |
| (c) | $M_1$ + Time deposit with commercial and co-operative banks<br>$M_1$ + வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகளின் கால வைப்பு | – | $M_1$ |
| (d) | $M_3$ + Post office deposits<br>$M_3$ + அஞ்சலக வைப்புகள் | – | $M_3$ |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | $M_1$ | $M_2$ | $M_3$ | $M_4$ |
| (B) | $M_2$ | $M_3$ | $M_4$ | $M_1$ |
| (C) | $M_3$ | $M_4$ | $M_2$ | $M_1$ |
| (D) | $M_2$ | $M_1$ | $M_4$ | $M_3$ |

(E) Answer not known
விடை தெரியவில்லை

77. Which types of Money high borrowing rates implies?
கடன் வாங்குவதற்கு வட்டியின் வீதம் அதிகமாக இருப்பது?

(A) Dear Money
அருகாமை பணம்

(B) Cheap Money
மலிவு பணம்

(C) Neutral Money
நடுநிலைமை பணம்

(D) Both (A) and (B)
அருகாமை பணம் மற்றும் மலிவு பணம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

78. Which type of bank has either complete control (or) residuary monopoly of note issue?
எந்த வங்கியானது நோட்டு வெளியீட்டில் முழுமையான கட்டுப்பாட்டை (அ) எஞ்சிய ஏகபோகத்தை கொண்டுள்ளது.

(A) Commercial Bank
வணிக வங்கி

(B) Central Bank
மைய வங்கி

(C) World Bank
உலக வங்கி

(D) IMF
பன்னாட்டு பண நிதி

(E) Answer not known
விடை தெரியவில்லை

79. Number of times the total deposit would be the initial deposit is determined by
மொத்த வைப்புத் தொகை அதிகரிப்பதும் ஆரம்ப வைப்புத் தொகையை நிர்ணயிப்பது __________ ஆகும்.

(A) Cash Reserve Ratio
பண இருப்பு விகிதம்

(B) Legal Reserve Ratio
சட்ட இருப்பு விகிதம்

(C) Bank Rate
வங்கி விகிதம்

(D) Stationary Liquidity Ratio
நிர்மை விகிதம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

80. Assertion [A] : The monetary policy is a policy formulated by the central bank.

கூற்று [A] : பணக்கொள்கை மத்திய வங்கியால் நிர்ணயம் செய்யப்படுகிறது.

Reason [R] : The policy involves measure taken to regulate the supply of money, availability and cost of credit of the economy.

காரணம் [R] : பண அளிப்பு, பண செலவு மற்றும் தேவைப்படும் கடன் அளவை சார்ந்து அமையும்.

(A) Both [A] and [R] are correct
[A] மற்றும் [R] சரி

(B) [A] is correct [R] is incorrect
[A] சரி [R] தவறு

(C) Both [A] and [R] are false
[A] மற்றும் [R] தவறு

(D) [A] is false [R] is correct
[A] தவறு [R] சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

81. The marginal cost (me) will always rise more sharply than the
இறுதி நிலை செலவுக்கோடு __________ கோட்டைவிட எப்பொழுதும் உயர்ந்து காணப்படும்.

(A) AVC
சராசரி மாறும் செலவு கோடு (AVC)

(B) AFC
சராசரி மாறா செலவு கோடு (AFC)

(C) LAC
நிண்டகால சராசரி செலவு கோடு (LAC)

(D) TFC
மொத்த மாறா செலவு கோடு (TFC)

(E) Answer not known
விடை தெரியவில்லை

82. Difference between SAC and LAC
நீண்ட கால சராசரி செலவுக்கு குறுகிய கால சராசரி செலவுக்கு உள்ள வேறுபாடு

(1) Both LAC and SAC are 'U' shaped

நீண்ட கால சராசரி செலவு கோடு மற்றும் குறுகிய கால சராசரி செலவு 'U' வடிவத்தில் இருக்கும்

(2) LAC can not be higher than the SAC

நீண்ட கால சராசரி செலவு கோடானது குறுகிய கால சராசரி செலவு கோட்டிற்கு மேல் அமைந்து இருக்காது

(3) LAC can cut any SAC

நீண்ட கால சராசரி செலவு கோடானது குறுகிய கால சராசரி செலவு கோட்டை வெட்டிச் செல்லும்

(4) LAC can be tangential to SAC

நீண்ட கால சராசரி செலவு கோடு குறுகியகால சராசரி செலவு கோட்டை தொட்டு செல்லும்

(A) (1), (2), (3), (4) only correct
(1), (2), (3), (4) சரி

(B) (1), (2), (3) only correct
(1), (2), (3) மட்டும் சரி

(C) (1), (2), (4) only correct
(1), (2), (4) மட்டும் சரி

(D) (1), (2) only correct
(1), (2) மட்டும் சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

83. The benefits accuring to each member firm of the industry, as a result of the expansion of the industry.
தொழிற்சாலையை விரிவுபடுத்துவதால் அனைத்து நிறுவனங்களும் பயன்பெறுவது என்பது

(A) Internal economies of scale
அகச் சிக்கனம்

(B) External economies of scale
புறச் சிக்கனம்

(C) Large scale of production
பேரளவு உற்பத்தி

(D) Small scale of production
சிற்றளவு உற்பத்தி

(E) Answer not known
விடை தெரியவில்லை

84. Accounting costs + Implicit costs = ?
கணக்கீட்டு செலவு + உள்ளடக்கிய செலவு = ?

(A) Economic profit
பொருளாதார இலாபம்

(B) Economic costs
பொருளாதார செலவு

(C) Opportunity cost
வாய்ப்பு வழிச் செலவு

(D) Social cost
சமூக செலவு

(E) Answer not known
விடை தெரியவில்லை

85. Nature of the fixed and variable costs of production is
உற்பத்தியில் மாறும் செலவு மற்றும் மாறா செலவுக்குள் உள்ள வேறுபாடு யாது

(A) Fixed cost are independent and variable cost are dependent
மாறா செலவு தன்னிச்சையான மற்றும் மாறும் செலவு சார்ந்துள்ளது

(B) Fixed cost and variable are independent
மாறா செலவு மற்றும் மாறும் செலவு தன்னிச்சையானது

(C) Fixed cost and variable cost are dependent
மாறா செலவு மற்றும் மாறும் செலவு சார்ந்துள்ளது

(D) Fixed cost are dependent and variable cost are independent
மாறா செலவு சார்ந்துள்ளது மற்றும் மாறும் செலவு தன்னிச்சையானது

(E) Answer not known
விடை தெரியவில்லை

86. The relationship between production function is
உற்பத்தி சார்பில் இடையே உள்ள தொடர்பு

(A) Relationship between physical inputs and physical outputs
உள்ளீடுகளுக்கும் வெளியீடுகளுக்கும் உள்ள தொடர்பு

(B) Relationship between capital inputs and physical outputs
மூலதனத்திற்கும் வெளியீட்டிற்கும் உள்ள தொடர்பு

(C) Relationship between physical inputs and capital outputs
உள்ளீடுகளுக்கும் மூலதனத்திற்கும் உள்ள தொடர்பு

(D) Relationship between capital inputs and capital outputs
மூலதன உள்ளீடுகளுக்கும் மூலதன வெளியீடுக்கும் உள்ள தொடர்பு

(E) Answer not known
விடை தெரியவில்லை

87. Name the Nicholas Kaldor's welfare criterion.
நிக்கோளஸ் கால்டாரின் மக்கள் நல அளவுகோலின் பெயர் கூறுக.

(A) Compensation principle
ஈடு செய்யும் கோட்பாடு

(B) Scitovsky paradox
சிட்டோஸ்கை முரண்பாடு

(C) Pareto criterion
பேரிட்டோ அளவுகோல்

(D) Pareto optimality
பேரிட்டோ உகந்த நிலை

(E) Answer not known
விடை தெரியவில்லை

88. According to Modem studies the shape of Long Run cost curves are
தற்கால ஆய்வின் படி நீண்ட கால செலவு கோடுகள் கீழ்க்கண்டவாறு அமைந்திருக்கும்

(A) L – Shaped
L – வடிவில்

(B) U – Shaped
U – வடிவில்

(C) Z – Shaped
Z – வடிவில்

(D) V – Shaped
V – வடிவில்

(E) Answer not known
விடை தெரியவில்லை

89. Reason and Assertion type

காரணம் மற்றும் கூற்று வகை

Assertion [A] : When the price of the commodity falls, the real income of the consumer increases

கூற்று [A] : பொருளின் விலை குறையும் பொழுது நுகர்வோரின் உண்மை வருமானம் அதிகரிக்கிறது

Reason [R] : Because the consumer has to spend less in order to buy the same commodity

காரணம் [R] : ஏனென்றால் நுகர்வோர் அதே அளவு பொருள்களை வாங்குவதற்கு குறைந்த அளவு செலவே செய்ய வேண்டியுள்ளது.

(A) [A] is true but [R] is false

[A] சரி ஆனால் [R] தவறு

(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]

[A], [R] இரண்டும் சரி மேலும் [R] என்பது [A] யின் சரியான விளக்கமாகும்

(C) [A] is false but [R] is true

[A] தவறு [R] சரி

(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A] is correct

[A], [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A] யின் சரியான விளக்கமல்ல

(E) Answer not known

விடை தெரியவில்லை

90. Arrange the following definitions in chronological order
கீழ்க்கண்ட பொருளியல் இலக்கணங்களை வரிசைப்படுத்துக.

(1) Growth definition

வளர்ச்சி இலக்கணம்

(2) Scarcity definition

பற்றாக்குறை இலக்கணம்

(3) Welfare definition

நல இலக்கணம்

(4) Wealth definition

செல்வ இலக்கணம்

(A) (4), (3), (2), (1)

(B) (1), (2), (3), (4)

(C) (2), (3), (4), (1)

(D) (4), (3), (1), (2)

(E) Answer not known
விடை தெரியவில்லை

91. According to point method measuring the price elasticity of demand is
விலை தேவை நெகிழ்ச்சியை புள்ளி முறையில் அளவிடும் முறை ―――――― ஆகும்.

(A) $\Sigma d = \frac{\text{Lower Segement (of the demand curve)}}{\text{Upper segment (of the demand curve)}}$

$\Sigma d = \frac{\text{தேவை கோட்டின் கீழ்ப்பக்கம்}}{\text{தேவை கோட்டின் மேல்பக்கம்}}$

(B) $\Sigma d = \frac{\text{Lower Segement (of the supply curve)}}{\text{Upper segment (of the supply curve)}}$

$\Sigma d = \frac{\text{அளிப்பு கோட்டின் கீழ்ப்பக்கம்}}{\text{அளிப்பு கோட்டின் மேல்பக்கம்}}$

(C) $\Sigma d = \frac{\text{Upper Segement (of the demand curve)}}{\text{Lower segment (of the supply curve)}}$

$\Sigma d = \frac{\text{தேவை கோட்டின் மேல்பக்கம்}}{\text{தேவை கோட்டின் கீழ்ப்பக்கம்}}$

(D) $\Sigma d = \frac{\text{Upper Segement (of the supply curve)}}{\text{Lower segment (of the supply curve)}}$

$\Sigma d = \frac{\text{தேவை கோட்டின் மேல்பக்கம்}}{\text{அளிப்பு கோட்டின் கீழ்ப்பக்கம்}}$

(E) Answer not known
விடை தெரியவில்லை

92. Which of the following is false?
கீழ்கண்டவற்றுள் எது தவறானது?

(A) GDP at market price = C+ I + G+ X – M
சந்தை விலையில் GDP = C+ I + G+ X – M

(B) GNP at market price = GDP at market price + Net factor income from abroad
சந்தை விலையில் GNP = சந்தைவிலையில் GDP + உற்பத்தி காரணிகளின் அயல்நாட்டு நிகர வருமானம்

(C) NDP at market price = GDP at market price + Depreciation
சந்தை விலையில் NDP = சந்தை விலையில் GDP + தேய்மானம்

(D) Personal Disposable Income = Personal Income – Personal Taxes
தனிநபர் செலவிடக்கூடிய வருமானம் = தனிநபர் வருமானம் – வரி இனங்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

93. Assertion [A] : Consumer's surplus is what we are prepared to pay minus what we actually pay.

கூற்று [A] : நுகர்வோர் எச்சம் என்பது நாம் கொடுக்க விரும்பும் விலையில் உண்மையில் கொடுத்த விலையை கழித்தால் கிடைப்பது ஆகும்.

Reason [R] : Consumer's surplus is measured by the difference between total utility and the amount spent

காரணம் [R] : மொத்த பயன்பாட்டிற்கும் உண்மையில் கொடுத்த பணத்திற்கும் உள்ள வேறுபாடு நுகர் எச்சம் ஆகும்.

(A) [A] is true but [R] is false

[A] சரி ஆனால் [R] தவறு

(B) Both [A] and [R] are true

[A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி

(C) Both [A] and [R] are false

[A] மற்றும் [R] ஆகிய இரண்டும் தவறு

(D) [R] is true [A] is false

[R] சரி [A] தவறு

(E) Answer not known
விடை தெரியவில்லை

94. Assertion [A] : Normative economics involves value Judgments.

கூற்று [A] : நெறியுறை பொருளியல் மக்களின் தீர்ப்பை உள்ளடக்கியது.

Reason [R] : The conceptions of the people about what is good or bad

காரணம் [R] : எது நல்லது அல்லது எது கெட்டது என்ற கருத்தை மக்கள் கூறுகின்றனர்.

(A) [A] is true but [R] is false

[A] என்பது சரியானது ஆனால் [R] தவறானது

(B) [A] is false [R] is true

[A] என்பது தவறு [R] என்பது சரியானது

(C) Both [A] and [R] are true but [R] is not correct explanation of [A]

[A] மற்றும் [R] சரியானது ஆனால் [R] என்பது [A] க்குண்டான சரியான விளக்கம் அல்ல

(D) Both [A] and [R] are true and [R] is correct explanation of [A]

[A] மற்றும் [R] ம் சரியானது மற்றும் [R] என்பது [A] க்குரிய சரியான விளக்கம் ஆகும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

95. The ratio of the percentage change in demand to the percentage change in price is called as
விலையில் ஏற்படும் மாற்ற விகிதம், மற்றும் தேவையில் ஏற்படும் மாற்ற விகிதத்தை ________ என்று அழைக்கப்படுகின்றது.

(A) Inelastic demand
நெகிழ்ச்சியற்ற தேவை

(B) Elasticity of supply
அளிப்பு நெகிழ்ச்சி

(C) Elasticity of demand
தேவை நெகிழ்ச்சி

(D) Cross elasticity of demand
குறுக்கு தேவை நெகிழ்ச்சி

(E) Answer not known
விடை தெரியவில்லை

96. The general solution of the partial differential equation is $z(x-y)=x^2p-y^2q$

$z(x-y)=x^2p-y^2q$ என்ற பகுதி வகைகெழு சமன்பாட்டின் பொது தீர்வு ———— ஆகும்

(A) $\phi\left(\frac{1}{x}-\frac{1}{y},\frac{z}{x-y}\right)=0$

(B) $\phi\left(\frac{1}{x}+\frac{1}{y},\frac{z}{x-y}\right)=0$

(C) $\phi\left(\frac{1}{x}-\frac{1}{y},\frac{z}{x+y}\right)=0$

(D) $\phi\left(\frac{1}{x},\frac{1}{y},\frac{z}{x+y}\right)=0$

(E) Answer not known
விடை தெரியவில்லை

97. The partial differential equation of the type $f(p,q)=0$

$f(p,q)=0$ வகை பகுதி வகைக்கெழு சமன்பாடு

(A) Has a singular solution
ஒருமைத் தீர்வு பெற்றிருக்கும்

(B) Has no singular solution
ஒருமைத் தீர்வு பெற்றிருக்காது

(C) Has no general solution
பொது தீர்வு பெற்றிருக்காது

(D) Both (A) and (C)
(A) மற்றும் (C) இரண்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

98. The general solution of $\frac{\partial z}{\partial x}e^{y} = \frac{\partial z}{\partial y}e^{x}$ is

$\frac{\partial z}{\partial x}e^{y} = \frac{\partial z}{\partial y}e^{x}$ என்ற சமன்பாட்டின் பொது தீர்வு ———————— ஆகும்.

(A) $z = ae^{x} + be^{x}$

(B) $z = e^{x} + e^{y}$

(C) $z = a\left(e^{x} + e^{y}\right) + b$

(D) $z = e^{2x} + be^{x}$

(E) Answer not known
விடை தெரியவில்லை

99. Match the following :
கீழ்கண்டவற்றை பொருத்துக :

(a) $pq = z$ — 1. $z = ax + by$

(b) $pq = x$ — 2. $2\sqrt{z} = \frac{x}{a} + ay + b$

(c) $pq = 1$ — 3. $z = \frac{x^{2}}{2a} + ay + b$

(d) $z = px + qy$ — 4. $z = ax + \frac{y}{a} + b$

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

100. Clairaut's form of differential equation is

வகைக்கெழுச் சமன்பாட்டின் கிளைராட்ஸ் வடிவம் ———————— ஆகும்.

(A) $y = px + f(p)$

(B) $y = f(x, p)$

(C) $x = f(y, p)$

(D) $Mdx + Ndy = 0$

(E) Answer not known
விடை தெரியவில்லை

101. The partial differential equation of all spheres whose centres lie on the $z$-axis is

அனைத்து கோளங்களின் மைய புள்ளிகள் $z$-அச்சில் அமைந்துள்ளது எனில் அவற்றின் பகுதி வகைகெழு சமன்பாடு ———————— ஆகும்.

(A) $\frac{x}{p} = \frac{y}{q}$

(B) $\frac{x}{q} = \frac{y}{p}$

(C) $yp = q$

(D) $xp = q$

